அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 151 /2017
தேதி : 05.12.2017

**மீனவர்கள் மீண்டும் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும்வரை இடைக்கால நிவாரணம் வழங்கவேண்டும்.**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத்தலைவர் ஆர்.சரத்குமார் வேண்டுகோள்.**

தமிழகத்தில் சமீபத்தில் ஒக்கி புயல் தாக்கியதில் தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி உள்ளிட்ட தென்மாவட்டங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. அதிலும், கன்னியாகுமரி மாவட்டம் மிகப்பெரிய அளவில் பாதிப்பிற்கு உள்ளாகி இருக்கிறது.

இந்நிலையில், தூத்துக்குடி, கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்களின் மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றுவிட்டு கரை திரும்பவில்லை என்னும் செய்தி வருத்தமளிப்பதாக உள்ளது. மீனவர் தரப்பில் ஆயிரக்கணக்கான மீனவர்கள் இன்னும் கரை திரும்பவில்லை என்ற கவலையை வெளிப்படுத்தியிருக்கும் நிலையில், அரசு தரப்பில் அந்த எண்ணிக்கையை மிகவும் குறைவாக கணக்கிட்டு, மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுத்து வருவதாக கூறியிருக்கிறார்கள்.

அரசு தரப்பிற்கும், மீனவ தரப்பிற்கும் எண்ணிக்கையில் வித்தியாசம் இருப்பது உண்மை நிலவரம் புரியாமல் இருக்கிறது. இந்நிலையில் அரசு நிர்வாகம் அனைத்து மீனவ கிராமங்களுக்கும் சென்று கணக்கெடுத்து உண்மை நிலவரம் என்ன என்பதை கண்டறிய வேண்டும். அதோடு காணாமல் போன மீனவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் அதிகமாக இருந்தாலும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையின் தீவிரத்தன்மை அதிகமாகவே இருக்க வேண்டும்.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன், காணாமல் போன மீனவர்களின் எண்ணிக்கையை ஒரு விவாதப் பொருளாக ஆக்காமல் கடலோர காவல்படையின் துணைகொண்டு அவர்களை மீட்பதற்கான நடவடிக்கையை தீவிரப்படுத்த வேண்டும். வெளிமாநிலங்களில் கரை ஒதுங்கி இருக்கும் தமிழக மீனவர்கள் தங்கள் கிராமங்களுக்கு திரும்பிடவும், அவர்களது படகுகளை பத்திரமாக எடுத்து வந்து ஒப்படைப்பதற்கும், பழுதுபட்ட படகுகளை மாற்றுவதற்கு தகுந்த நிதி உதவிகளையும் வழங்கிட வேண்டும்.

மேலும் ஓரிரு நாள்களில் அடுத்து ஒரு புயல் சின்னம் உருவாகக்கூடும் என்ற வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கையை கருத்தில் கொண்டு மீனவ சகோதரர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இயல்பு நிலை ஏற்பட்டு மறுபடியும் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லும் வரை அவர்களுக்கு உணவுப் பொருள்கள், பாதுகாப்பான தங்குமிடம் உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் செய்வதோடு, இடைக்கால நிவாரண உதவித்தொகை வழங்கிட வேண்டும் என்றும் தமிழக அரசை சமத்துவ மக்கள் கட்சி சார்பில் வலியுறுத்துகிறேன்.

நன்றி வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை - 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com